செய்தி வெளியீடு எண்:566 நாள்: 02.12.2016

## செய்தி வெளியீடு

## 108 ஆம்புலன்ஸ் சேவை மையத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் கள ஆய்வு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அரசு பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்படும் என்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ள நிலையில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. விபத்து மற்றும் ஆபத்து காலங்களில் சிக்கியவர்களுக்கு Golden Hour என்பது ஒரு முக்கியமான தருணமாகும். இத்தருணத்திற்குள் விபத்தில் சிக்கியவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து உயிர்களை காப்பாற்றுவதில் 108 ஆம்புலன்ஸ் சேவை மிகப் பெரிய பொறுப்பை வகிக்கிறது. தமிழ்நாட்டில் 855 ஆம்புலன்ஸ் இந்த சேவையில் உள்ளது. அவற்றில் பச்சிளம் குழந்தைகளுக்கான 65 Neonatal ஆம்புலன்ஸ்களும், மழை வெள்ளத்திலும் செல்லக்கூடிய 78 Four Wheel Drive ஆம்புலன்ஸ்களும், மற்றும் சின்ன சின்ன தெருக்களிலும் செல்லும் வகையில் 41 இரு சக்கர வாகன ஆம்புலன்ஸ்களும் சேவையில் உள்ளன. இந்த சேவையை பயன்படுத்தும் விதமாக 24 மணி நேரமும் தெலைபேசி மூலமாக தொடர்பு கொள்ள ஏதுவாக சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சேவை மையம் (Call Centre) ஒரு முதுகெலும்பு போன்று செயல்படுகிறது. இந்த சேவை மழை மற்றும் பேரிடர் காலங்களில் எந்தவித தொய்வும் இல்லாமல் தொடர்ந்து பொதுமக்களுக்கு சேவை அளிப்பதை உறுதிபடுத்தும் வகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (02.12.2016) திடீர் ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்பொழுது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர். தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மற்றும் உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**